**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**C.C. No.1286/2022 P.W.1**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | மணிமேகலை | க–பெ | இராஜேந்திரன் |
| ஊர்: | : | காரைக்குடி | சமயம்: | |
| வயது: | : | 52/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | வீட்டுகுடித்தனம் | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.06.2025**

**1 ம் எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 3 ம் எதிரி ஆஜர்.**

---

முதல் விசாரணை.

நான் காரைக்குடியில் வசித்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். என் மகள் உஷா ராணி என்பவர் 2011 ம் வருடம் ரமேஷ் என்பவருடன் திருமணம் செய்து கொண்டார். 25.05.2019 அன்று எனது மகள் தூக்கில் தொங்கி தற்கொலை செய்து இறந்து விட்டார். எனது மகளுக்கு 2 ஆண் மகன்களும் உள்ளனர். மேற்படி சம்பவ சமயத்தின் போது எனது பேரன்கள் எனது வசம் இருந்தார்கள். அவர்களை நாங்கள் பார்த்து வருகிறோம். எனது மகள் திருமண்த்தின் போது 50 பவுன் நகைகள், 1 1/2 கிலோ வெள்ளி ஜாமான்கள். 100000 ரூபாய் பணம் உள்ளிட்டவற்றை சீர்வரிசையாக மாப்பிள்ளை வீட்டார்க்கு கொடுத்திருந்தோம்.

20.06.2019 அன்று காலை 8.00 மணியளவில் நானும் எனது மைத்துனர் வேலுசாமி என்பவரும் எங்கள் சம்மந்தி வீட்டிற்கு சென்று எனது மகள் இறந்து விட்டாள் திருமணத்தின் போது நாங்கள் மாப்பிள்ளை வீட்டார்க்கு கொடுத்திருந்த மேற்படி நகை மற்றும் வெள்ளி ஜாமான்களை அவர்களிடம் கேட்டோம். அப்பொழுது அங்கு இருந்த மருமகன் ரமேஷ் என்பவர் என்னை பெண் என்னும் பாராமல் புன்ட மகளே தேவிடியா மகளே என்று அருவருக்கத்தக்க வார்த்தைகளால் திட்டினார். அங்கு இருந்த பரிமளா மற்றும் பூமயில் இருவரும் ஒன்று சேர்ந்து கொண்டு தலை முடியை பிடித்து வெளியே தள்ளினார்கள். அதில் ரமேஷ் என்பவர் எனது வலது கன்னத்தில் அரைந்து விட்டார். அங்கு இருந்த எனது மைத்துனர் மேற்படி சண்டையை விலக்கி விட்டு என்னை காவல் நிலைத்திற்கு அழைத்து சென்றார்.

நாங்கள் சம்பவயிடத்தில் இருந்து கிளம்பி முயற்சித்த போது எதிரிகள் மூவரும் மீண்டும் நகை பணம் கேட்டு வந்தால் கொல்லாமல் விடமாட்டேன் என்றும் மிரட்டினார். பின்னர் நான் காவல் நிலையம் சென்று நடந்த விவரங்களை சொல்லி எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்குமாரு புகார் அளித்தேன். புகார் **அ.சா.ஆ.1**. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J
Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.06.18 10:28:47 +0530

குற்றவியல் நடுவர், காரைக்குடி

# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## C.C. No.1286/2022 P.W.2

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | வேலுச்சாமி | த–பெ | பெரிய தம்பி |
| ஊர்: | : | தேலுார். | சமயம்: | |
| வயது: | : | 68/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | விவசாயம் | மாவட்டம் | இராமநாதபுரம் |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.06.2025**
**1ம் எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 3ம் எதிரி ஆஜர்.**

----------------------------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தேலுாரில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 மற்றும் ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். இவ்வழக்கின் பிற எதிரிகளையும் தெரியும். 25.05.2019 அன்று எனது தம்பி மகள் உஷா என்பவர் துாக்கில் தொங்கி தற்கொலை செய்து இறந்து விட்டார். அவருக்கு 2 ஆண் மகன்களும் உள்ளனர். மேற்படி சம்பவ சமயத்தின் போது அவர்களது மகன்கள் அ.சா.1ன் வசம் இருந்தார்கள். அவர்களை அ.சா.1 பார்த்து பராமரித்து வந்தார். எனது தம்பி மகள் திருமண்த்தின் போது 50 பவுன் நகைகள், 1 1/2 கிலோ வெள்ளி ஜாமான்கள். 100000 ரூபாய் பணம் உள்ளிட்டவற்றை சீர்வரிசையாக மாப்பிள்ளை வீட்டார்க்கு கொடுத்திருந்தார்கள்.

20.06.2019 அன்று காலை 9.00 மணியளவில் நானும் அ.சா.1ம் அவர்களது சம்மந்தி வீட்டிற்கு சென்று எனது தம்பி மகள் இறந்து விட்டாள் திருமணத்தின் போது அவர்கள் மாப்பிள்ளை வீட்டார்க்கு கொடுத்திருந்த மேற்படி நகை மற்றும் வெள்ளி ஜாமான்களை அவர்களிடம் கேட்டோம். அப்பொழுது அங்கு இருந்த மருமகன் ரமேஷ் என்பவர் அ.சா.1ஐ பெண் என்னும் பாராமல் புன்ட மகளே தேவிடியா மகளே என்று அருவருக்கத்தக்க வார்த்தைகளால் திட்டினார். அங்கு இருந்த பரிமளா மற்றும் பூமயில் இருவரும் ஒன்று சேர்ந்து கொண்டு தலை முடியை பிடித்து வெளியே தள்ளினார்கள். அதில் ரமேஷ் என்பவர் அ.சா.1ன் வலது கன்னத்தில் அரைந்து விட்டார். அங்கு இருந்த நான் சண்டையை விலக்கி விட்டு அ.சா.1ஐ காவல் நிலைத்திற்கு அழைத்து சென்றேன்.

நாங்கள் சம்பவயிடத்தில் இருந்து கிளம்பி முயற்சித்த போது எதிரிகள் மூவரும் மீண்டும் நகை பணம் கேட்டு வந்தால் கொல்லாமல் விடமாட்டேன் என்றும் மிரட்டினார். பின்னர் நான் மற்றும் அ.சா.1 காவல் நிலையம் சென்று நடந்த விவரங்களை சொல்லி எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்குமாரு அ.சா.1 புகார் அளித்தார் நான் உடன் இருந்தேன். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J
Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.06.18 10:28:57 +0530

குற்றவியல் நடுவர், காரைக்குடி

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**C.C. No.1286/2022 P.W.3**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | பாலுகரசு | த–பெ | குப்பு |
| ஊர்: | : | காரைக்குடி | சமயம்: | |
| வயது: | : | 57/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | எலக்ட்ரிக்கல் | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.06.2025**

**1ம் எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 3ம் எதிரி ஆஜர்.**

------------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் காரைக்குடியில் வசித்து எலக்ட்ரிக்கல் வேலை செய்து வருகிறேன். 20.06.2019 அன்று காலை 9.00 மணிக்கு காரைக்குடி பாரி நகரில் இடம் பார்ப்பதற்காக நானும் விஜய் என்பவரும் சென்று கொண்டிருந்போது குமணன் தெரு 4ம் வீதியில் தகராறு சம்பவம் ஒன்று நடைபெற்று கொன்டிருந்தத போது காரைக்குடி வடக்கு போலீசார் சம்பவயிடத்திற்கு வந்து விசாரணை செய்து படம் பரைந்து ஆவணம் ஒன்றை தயார் செய்தார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜர் ஆவணத்தில் உள்ள 2வது கையொப்பம் என்னுடைது தான். அது அ.சா.ஆ.2. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.06.18 10:29:05 +0530

குற்றவியல் நடுவர், காரைக்குடி